Bridges in Hosur Taluk.

* 282 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Miister for Local Administration be pleased to state—

(*a*) whether this Government has received any recommendation from the Collector, Dharmapuri district in regard to the construction of two causeways or bridges on the South Pennar River, at the Villages of (i) Pathakota (ii) Keeranapalii in Hosur Taluk, under the Master Plan; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஓசூர் வட்டத்தில் போக்குவரத்து நிலையை சீர்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சியாளர் ரூ. 75 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை தயாரித்து அனுப்பியுள்ளார். பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ள இரண்டு பால வேலைகளும் இதில் அடங்கியுள்ளன. மேற்குறிப்பிட்ட மதிப்பீடானது பிறகு ரூ. 15.3 இலட்சமாக குறைக்கப்பட்டு அதற்கான திட்டத்தை தலைமைப் பொறியாளர் அனுப்பினார். கிராம வளர்ச்சி நெறியாளரும் இத்திட்டத்தை ஒப்புக்கொண்டார். 1971-72, 1972-73, 1973-74 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 5 இலட்சம், ரூ. 5 இலட்சம், ரூ. 5.37 இலட்சம் செலவிடப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. பேரவை வினாவில் குறிப்பிடப்பட்ட இரண்டு பாலங்களும் திருத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ் உள்ளன. எனினும் நிதி பற்றாக்குறை காரணமாக வரும் ஆண்டுகளில்தான் இது பரிசீலிக்கப்பட வேண்டியதாய் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : South Pennar river runs in the centre of the taluk and there are a number of villages on either side of the river all along the course and the two bridges are required at the places mentioned in my question. Therefore will the Hon. Minister reconsider this request and see that orders are passed for the construction of these two bridges?

THE HON. THIRU M. MUTHUSWAMI : The two bridges mentioned in the Legislative Assembly question have been included in the revised plan sent by the Chief Engineer and accepted by the Director of Rural Development. However, due to paucity of funds the question of taking them up has to be considered in future years.

Full Educational Grant to Panchayat Unions.

* 283 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government at present, to sanction full educational grant to the Panchayat Unions which are financially unsound; and

(*b*) if so, the details thereof?

[1970 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) & (இ) ஊராட்சி கல்வி நிதி நிலை நகைவல் குழு என்ற ஓர் குழுவினை அரசு அமைத்துள்ளது. இக் குழுவின் விவரமான அறிக்கை வரப்பெற்றபின் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கல்வி மான்யக் குழு உதவி அளிப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டு காலமாக அநேக ஊராட்சி ஒன்றியங்கள் நிதி பற்றுக்குறை காரணமாக, ஆசிரியர்களுக்கு காலாகாலத்தில் சம்பளங்களை வழங்க முடியாத நிலை இருப்ப தால், அந்தக் குழு அமைக்கப்பட்டது. அது இன்னும் அறிக்கை தரவில்லை. அதே நேரத்தில் ஏராளமான பஞ்சாயத்து யூனியன்கள் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறுர்களே. அதைப் பரிசீலனை செய்து, அவர்களிடம் ஒரு இன்டரிம் ரிப்போர்ட் வாங்கி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 6—8—1969-ல் தான் அந்தக் குழு அமைக்கப்பட்டது. குழுவேலைகளை முடித்து விட்டதாக தகவல் இருக் கிறது. அவர்களுடைய அறிக்கை இன்னும் சில தினங்களில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்கள், அங்கே ஊராட்சி ஒன்றியங் களுக்கு நிதிப் பற்றுக்குறை என்று முறையிடு வருகிறது. அங்கே பணம் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. கனம் உறுப்பினர் கூறும் குறை இருந்து வருவதை விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. துரைராஜ்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் பற்றுக்குறை அடிக்கடி ஏற்படுகிறது. குழுவின் இறுதி யான அறிக்கை வருவதற்குள்ளாக, இடைக்கால நிவாரணமாக முன் பணம் கொடுத்து நிலைமைகளை சமாளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அப்படி எந்த ஊராட்சி ஒன்றியத் திற்காவது பணத்தட்டுப்பாடு என்று, வழிவகை முன்பணம் கேட்டால், அது கொடுக்கப்படுகிறது. சங்கரன்கோவிலிலிருந்து அப்படி கோரிக்கை வந்தால் அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

திரு. டி. மார்டின்: பேரவைத்தலைவர் அவர்களே, இந்த மாதத்திலேயே சாத்தான்குளம், உடன்குடி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறுர்களே? அவர்களுக்கு உடனடியாக சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்தத் தகவலை மாண்புமிகு உறுப் பினர் ஏற்கனவே என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தால், இந் நேரம் பரிகாரம் கண்டிருக்கலாம். உடனடியாக அதைக் குறித்துக் கொடுப் பார்களானல் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

கொளகட்டூர் கூட்டுறவு கடனுதவிச் சங்கம்.

* 284 வின.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் கொளகட்டூர் கூட்டுறவு கடனுதவி சங்கத்தில் மோசடி செய்ததாக கூட்டுறவு இன்ஸ்பெக்டர்கள் உள்பட பலர் மீது டெபுடி கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் 1969 நவம்பரில் புகார் செய்துள்ளரா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?